## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.03.2020 தவக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 02

04.03.2020 புனித கசிமீர் - திருப்பலி 03

07.03.2020 புனித பெர்பேத்துவா - பெலிசித்தா - திருப்பலி 04

08.03.2020 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி 05

09.03.2020 உரோம் நகர் புனித பிரான்சிஸ் - திருப்பலி 06

15.03.2020 தவக்காலம் மூன்றாம் ஞாயிறு - திருப்பலி 07

17.03.2020 புனித பேட்ரிக் - திருப்பலி 09

18.03.2020 எருசலேம் நகர் புனித சிரில் - திருப்பலி 10

19.03.2020 மரியாவின் கணவர் புனித யோசேப்பு பெருவிழா-திருப்பலி11

22.03.2020 தவக்காலம் நான்காம் ஞாயிறு - திருப்பலி 12

25.03.2020 ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு பெருவிழா - திருப்பலி 13

29.03.2020 தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு - திருப்பலி 15


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. மரியாவின் கணவர் புனித யோசேப்பு வாழ்வு தரும் பாடம் 16
2. புனித பெர்பேத்துவா - பெலிசித்தா இவர்கள் யார்? 28
3. சிலுவையில் ஏழு வார்த்தைகள் 20
4. பாடுகளின் பாதை 25
5. திருஅவைச் செய்திகள் 28

# பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.03.2020 தவக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. தொநூ 2: 7-9,3:1-7 II. உரோ 5: 12-19 மத் 4: 1-11

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று தவக்காலத்தின் முதல் வாரத்தில் இருக்கின்றோம். சோதனைக்குட்படாதபடி விழிப்புடன் சோதனைகளை வெல்ல வேண்டும் என்ற மையச்சிந்தனை இன்றைய வாசகங்களில் இழையோடுகிறது. முதல் வாசகத்தில் நம் ஆதிப்பெற்றோர் அலகையின் சூழ்ச்சியை அறியாமல், கடவுளின் கட்டளைகளை மீறி சோதனையில் உழன்று தோற்றுப் போகின்றார்கள். கீழ்ப்படியாமையினால் எனும் பாவத்தில் வீழ்கின்றார்கள். புதிய ஆதாம் இயேசுவோ 40 நாள்கள் நோன்பிருந்து செபித்த பின்பு அலகை அவரைச் சோதிக்கிறது. ஆனாலும் இறைமகனுக்கு கீழ்ப்படிதலாலும், தாழ்ச்சியாலும், இறைவார்த்தையாலும் அலகையைத் தம்மிடத்திலிருந்து அகற்றுகின்றார். இறைவனின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டு திருமுழுக்கில் தூய ஆவியால் பிறந்துள்ள நாம் கடவுளின் பிள்ளைகள். கடவுளால் பிறந்தவர்கள். "கடவுளிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை, ஏனெனில் கடவுளின் இயல்பு அவரிடம் இருக்கிறது. கடவுளிடமிருந்து பிறந்தவராய் இருப்பதால் அவரால் பாவம் செய்ய இயலாது (1யோவா 3:9). ஒரு போர் வீரனைப்போல் தொடர்ந்து நற்பயிற்சியும் முயற்சியும் எடுத்தால் மட்டுமே கீழ்ப்படிதல், தாழ்ச்சி, நம்பிக்கை போன்ற குணங்கள் நம்மில் ஆட்சி செய்யும். அதற்கான அருளையும் ஆசீரையும் இப்பலியில் நற்கருணை ஆண்டவரிடம் கேட்டு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. <u>திருஅவைக்காக மன்றாடுவோம்:</u> நல்லாயனாம் இறைவா, உமது திருஅவையின் ஊழியராக நீர் தேர்ந்துக்கொண்ட திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் அனைவரும் உலகம், உடல், அதிகாரம், புகழ் எனும் சோதனைகளில் விழுந்துவிடாமல் விழிப்பாய் இருந்து கீழ்ப்படிதலோடு இறைமக்களை முன்னோக்கி நடத்திச்செல்ல உமது தூய ஆவியைப் பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. <u>நாட்டிற்காக மன்றாடுவோம்:</u> ஒற்றுமையின் இறைவா, உலக நாடுகளிடையே ஒற்றுமையும், சமாதானமும் விளங்கிடவும், இந்திய தேசத்தில் சாதிய, மத அரசியல் நோய்கள் ஒழிந்து மனித மாண்பு தழைத்தோங்கவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. <u>பங்கிற்காக மன்றாடுவோம்:</u> வாழ்வு தரும் இறைவா, உம்முன் கூடி செபிக்கும் எங்களையும் எங்கள் பங்கில் உள்ள அனைத்து குடும்பங்களையும், உடல், உள்ள, உலக மாயையெனும்

சோதனைகளையும் இயேசு கற்றுத் தந்த செபத்தை அடிக்கடிச் செபித்தும், நற்பண்புகளை கடைப்பிடித்தும் வெற்றிபெற உமது அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. துன்புறுவோருக்காக மன்றாடுவோம்: நலம் தரும் இறைவா, ஏழ்மை, வறுமை, நோய், தனிமை, முதுமை, இயலாமை, இயற்கை சீர்கேடு எனும் பல்வேறு துன்பங்களில் சிக்கி தவிப்போருக்கு நிலைவாழ்வும் விடுதலையும் தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.03.2020 புனித கசிமீர் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, போலந்து நாட்டு இளவரசரான புனித கசிமீர் 1458, அக்டோபர் மூன்றாம் நாள் க்ராக்கோ நகரில் பிறந்தார். சிறுவனாக இருந்ததில் இருந்தே பக்திச் சூழலுடன் வாழும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. ஒன்பது வயதானபோது கல்வி கற்பதற்காக அருட்தந்தை துளூகோஸ் என்பவரிடம் கசிமீர் சேர்க்கப்பட்டார். ஹங்கேரி மக்களின் விருப்பத்திற்கேற்ப 13ம் வயதில் ஹங்கேரியின் அரசராக நம் புனிதர் நியமிக்கப்பட்டார். நீதியோடும், உண்மையோடும் ஆட்சி செய்த மகனுக்குத் திருமணம் செய்து வைக்க இவரது தந்தை விரும்பினார். நமது புனிதர் திருமணம் செய்ய மறுத்துவிட்டார். இரவு நேரங்களில் பூட்டப்பட்டிருக்கும் ஆலயத்திற்கு வெளியே குளிரையும் பொருட்படுத்தாது பலமணி நேரங்கள் மண்டியிட்டு செபிக்கும் வழக்கத்தை நமது புனிதர் கொண்டிருந்தார். அன்னை மரியாமீது அளவற்ற பக்தி கொண்டு தேவதாயை "என் நல்ல தாய்" என்பார். தூய கசிமீர் தனது 26ம் வயதில் காசநோயால் இறந்தார். நமது புனிதர் சாகும் வரை கற்புள்ள வாழ்க்கை வாழ்ந்து வந்தார். நமது புனிதர் இளைஞர்களின் பாதுகாவலர். இளைஞர்களின் ஆண்டினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நாம் ஒவ்வொரு இளைஞனும் "ஆற்றலோடு மாற்றம் நோக்கி" பயணிக்க அவர்களுக்காக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கனிவும் மனத்தாழ்மையும் கொண்ட எம் இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதியும். இறைமக்கள் அனைவரும் திருமுழுக்கின் பொருளை உணர்ந்து உமக்கு உண்மையுள்ள சாட்சிகளாய்த் திகழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் இறைவா, எம் நாட்டையும், நாட்டையாளும் தலைவர்களையும், அதிகாரிகளையும் ஆசீர்வதியும். இவர்கள் அனைவரும் தெய்வ பக்தியுள்ளவர்களாக வாழ்ந்து மக்களை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தியருளத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, இளைஞர்களின் பாதுகாவலரான புனித கசிமீரைப் பின்பற்றி, இளைஞர்கள் ஆற்றலோடு எழுந்து ஒளி வீசி, வாடிக்கையான வாழ்வைத் தவிர்த்து சாதிக்கக் கூடியவர்களாக, அநீதியைக் கண்டு துவண்டு விடாமல் எதிர்த்து நின்று, உண்மைக்கும் நேர்மைக்கும் சான்று பகரும் வாழ்க்கை வாழ்ந்து வாழ்வின் மாற்றத்தை நோக்கி நடைப்போட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.03.2020 புனித பெர்பேத்துவா - பெலிசித்தா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

கிறிஸ்துவுக்காக தங்கள் உயிரையே துச்சமெனக் கருதி அவரது அன்பிற்காக இரத்தம் சிந்திய மறைசாட்சிகளான அநேக புனிதர்களுள் புனித பெர்பெத்துவா, புனித பெலிசித்தம்மா ஆகிய புனிதர்களும் திருஅவையின் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். புனித பெர்பெத்துவா உயர்ந்த குலத்தைச் சேர்ந்த பெண். புனித பெலிசித்தம்மா இவரின் அடிமைப்பெண். இருவரும் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவர்களானார்கள். செப்டிமஸ் செவேருஸ் என்ற கொடுங்கோலன் இவர்களைக் கைது செய்து மிருகங்களுக்கு இரையாகப்போட உத்தரவிட்டான். இவர்கள் தாங்கள் இறப்பதற்கு அஞ்சவுமில்லை, கிறிஸ்தவ வேதத்தை மறுதலிக்கவுமில்லை. வயது முதிர்ந்த பெர்ப்பத்துவாவின் தந்தை அவளை அணுகி வேதத்தை மறுதலிக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அவரின் முயற்சியும் பயனளிக்கவில்லை. இப்புனிதரின் கையில் பால் குடிக்கும் குழந்தை இருந்தது. தாய் அன்பும் இவரை அசைக்கவில்லை.

புனித பெலிசித்தாவும் கருவுற்றிருந்தாள். எட்டுமாதக் குழந்தை வயிற்றில் இருந்தது. கர்ப்பிணிப் பெண்ணைக் கொல்லக்கூடாது என்று ஒரு சட்டம் இருந்தது. வேதசாட்சி தகுதியை இழந்து விடுவேனோ, கிறிஸ்துவுக்காக உயிர் தியாகம் செய்யாமல் போய்விடுவேனோ, என்று அஞ்சினாள். கிறிஸ்தவர்கள் இப்புனிதைக்காக உருக்கமாகச் செபம் செய்ததின் பலனாக குழந்தை விரைவில் பிறந்துவிட்டது. அதன்பின் இருவரின் தலைகளும் வெட்டப்பட்டன. தங்களுக்கு வரப்போகும் வேதனைகளை அறிந்தும் இப்புனிதைகள் கிறிஸ்துவுக்காகத் தங்களின் உயிரைத் தியாகம் செய்தனர். விசுவாசத்தில் உறுதியாய் இறுதிவரை நிலைத்திருக்கவும் கிறிஸ்துவுக்காக பாடுகளை ஏற்றுக்கொள்ளவும் தேவையான அருளையும் வல்லமையும் பெற்றிட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையின் வளர்ச்சிக்காகவும் இறையாட்சியை இவ்வுலகில் நிலைநாட்டவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் இறுதிவரை தங்களின் துறவற வாழ்வில் நிலைத்திருந்து தூய ஆவியாரின்

துணையோடு திருஅவையை வழிநடத்தத் தேவையான உடல் நலமும், ஆன்ம பலமும் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, திருமுழுக்கின் வழியாக நாங்கள் பெற்ற கிறிஸ்துவ வாழ்வை ஒவ்வொரு நாளும் நினைவு கூர்ந்து தீய செயல்களுக்கும் பாவ நாட்டங்களுக்கும் அடிமையாகாமல் ஒளியின் மக்களாக வாழும் அருளைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தியாகமே உருவான இறைவா, இன்றைய புனிதர்களைப் போல நாங்களும் உம்மை ஏற்றுக்கொள்வதிலும் பின்பற்றுவதிலும் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டுமென்றும், துன்ப துயர நேரங்களிலும் வேதத்தை மறுதலிக்க ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் உமக்காக எத்துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் மன உறுதியைத் தர வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 08.03.2020 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. தொநூ 12: 1-4 II. 2திமொ 1: 8-10 மத் 17: 1-9

அன்பு இறை மக்களே, இன்று தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருப்பலியில் பங்குபெற நம்மை அழைத்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். தவக்காலம் நமக்கு ஆன்ம சுத்திகரிப்புச் செய்யும் காலமாக அமைந்துள்ளது. எத்தனை ஆண்டுகள் நாம் இந்த பூமியில் வாழ்ந்தாலும், நமது நல்ல செயல்கள் மட்டுமே இறைவனின் பார்வையில் மதிப்பு மிக்கவையாய் அமைந்து அவற்றின் பொருட்டே நாம் இறைவனின் இரக்கத்தைப் பெற இயலும். செயல் இல்லாத விசுவாசம் பயனற்றது. இன்றைய வாசகத்தில் ஆபிரகாமை இறைவன் அழைத்ததைக் காண்கின்றோம். இறைவனது குரலுக்குச் செவிகொடுத்து இறைவனுக்கு ஏற்புடையவராய் ஆபிரகாம் வாழ்ந்து விசுவாசத்தின் தந்தையாய் விளங்குகிறார்.

சாவை அழித்து அழியா வாழ்வை நமக்கு இயேசு கிறிஸ்து மீட்டுத் தந்துள்ளார் என்று புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் குறிப்பிடுகிறார். நற்செய்தி வாசகத்தில் இயேசு உருமாறியதையும் வானத்திலிருந்து இறைத்தந்தை அவருக்கு சான்றளித்ததையும் காண்கிறோம். எனவே இத்தவக்காலத்தில் நம்மையும் நமது செயல்களையும் ஆய்ந்தறிந்து நமது வாழ்வியலை கிறிஸ்துவின் நியமங்களுக்கேற்ப வடிவமைத்து அதை வாழ்வாக்கிக் கொள்ள வேண்டும். கிறிஸ்து நமக்காக மரித்து உயிர்த்ததன் பொருள் விளங்கவும், அவரது பாடுகள் நமது வாழ்வாக மாறவும், ஆண்டவரின் கட்டளைகளுக்கேற்ப நமது சிந்தனை, சொல், செயல், நடத்தைகள் யாவும் அமைந்திடவும் அதன் வழியாய் இறைவனின் அருளும், இரக்கமும், ஆசீரும் முடிவில்லா வாழ்வும் பெறவும் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை அவர்களுக்கு உமது உடனிருப்பை நல்கி, அவர் மேற்கொள்ளும் பணிகள் சிறக்கவும், கருத்துக்கள் நிறைவேறவும் அவரோடு இணைந்து திருப்பணிபுரியும், துறவறத்தார், குருக்கள், கன்னியர்கள் அனைவருக்கும் உடல் ஆன்ம நலனளித்து பாதுக்காத்து, வழிநடத்தவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. கருணையின் உருவே இறைவா, எமது பங்கு மக்களின் குடும்பங்களில் அமைதியும், ஒற்றுமையும் நிலவிட, எங்கள் கருத்துக்கள் நிறைவேற, முயற்சிகள் வெற்றியடைய, நாங்கள் தீச்செயல்களை விடுத்து ஆண்டவரின் இரக்கத்தைப் பெற, பாவமான காரியங்களில் நாட்டம் கொள்ளாமல் இருக்க, இந்த தவக்காலத்தில் நல்ல சிந்தனையையும் புதிய இதயத்தையும் தூய ஆவியார் தாமே நல்கி அனைவருக்கும் தேவையான ஆசீரையும் நோயற்ற வாழ்வையும் அருளிட உம்மை மன்றாடுகிறோம்.
3. நல்லாயனே இறைவா, இளையோர் தங்கள் வழிகளில் இறைவனை முன்னிறுத்தி அவருக்கு ஏற்புடையவர்களாய் நடந்து தங்கள் கல்வியிலும், பணியிலும், வாழ்விலும், பொருளாதாரத்திலும் ஏற்றம் காணவும், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தங்களின் பங்களிப்பை நல்கிடவும், ஏற்ற காலத்தில் நல்ல துணையினைத் தந்து மகிழ்வுடன் அவர்களை வாழச் செய்திட உம்மை மன்றாடுகிறோம்
4. நீதியின் அரசரே எம் இறைவா, எமது நாட்டில் ஆட்சிப்பொறுப்பில் உள்ள தலைவர்கள் மக்களுக்குத் தேவையான காரியங்களை எல்லோருக்கும் பொதுவாகவும் சமமாகவும் திறம்படவும் செயலாற்றத் தேவையான ஞானத்தைத் தந்து வழிநடத்திடவும், பிரிவினைகள் நீங்கி சமாதானம் நிலைக்கவும் மக்களின் தேவைகள் நிறைவேறவும் பொருளாதாரத்தில் வளர்ச்சிக் காணவும், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படவும் தேவையான ஞானத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 09.03.2020 உரோம் நகர் புனித பிரான்செஸ் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது உரோமை நகரில் செல்வாக்கு நிறைந்த குடும்பத்தில் பிறந்து, இளநங்கையாயிருக்கும்போதே துறவறத்தின்மீது மிகுந்த ஆர்வம் காட்டி, இறைவனின்மீது வேட்கை கொண்ட ஒரு புனிதையின் விழாவினைக் கொண்டாடுகின்றது. தூய பிரான்செஸ் என்ற இப்பெண்மணி ஏழை எளியோருக்குப் பணிவிடை புரிவதில் தம் நாட்களைச் செலவழித்தார். தம் வீட்டின் ஒரு பகுதியையே ஏழைகளுக்கான மருத்துவ விடுதியாக மாற்றினார். பல பெண்களை ஒன்றாய்க் கூட்டித் துறவற வார்த்தைப்பாடில்லாத ஒரு

சபையை உருவாக்கினார். இவர்கள் மனப்பூர்வமாகத் தங்களையே இறைவனுக்குக் கையளித்தனர். இறைவன் பெயரால் ஏழைகளுக்குத் தொண்டு செய்தனர். இவரது வாழ்க்கையைப் பார்க்கும்போது, நம் ஒவ்வொரு ஆன்மீக முயற்சியும் பயிற்சியும் நம்மை புனித நிலைக்கு அழைத்துச் செல்வதையே குறியாகக் கொண்டிருப்பதை நாம் உணர முடியும். கடவுள் நிலையிலிருந்து மனித நிலைக்கு தன்னைத் தாழ்த்தி, இவ்வுலகிற்கு வந்த இறைமகனின் நோக்கமே, மனித நிலையிலிருக்கும் நம்மை அவருடைய மாண்புமிக்க, மாட்சிமிகு நிலைக்கு உயர்த்துவதே என்பதை நாம் இன்றைய நாளில் நினைவு கூற அழைக்கப்பட்டுள்ளோம். நாம் அனைவருமே கடவுளின் இயல்புகளைக் கொண்டிருக்க அழைக்கப்பட்டுள்ளோம். அவற்றை வாழ்வாக மாற்றி, மன்னிப்பு, இரக்கம் இவைகளை நாம் நிறைய பெற, பிறருக்கும் கொடுக்க இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்குப் பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழத் தேவையான வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் ஊற்றே இறைவா, உமது சாயலில் படைக்கப்பட்டவர்கள் நாங்கள். எனவே உமது இயல்புகளை எமது வாழ்வாக மாற்றும் அருளைத் தந்து, எம் வாழ்வில் உம்மையே முன்மாதிரியாகக் கொண்டு, சக மனிதர்களோடும் நட்புறவுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. மன்னிப்பின் வள்ளலே இறைவா, திருமுழுக்கின் வழியாக நாங்கள் பெற்றுக்கொண்ட மன்னிப்பு என்ற கொடையைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டுள்ளோம் என்பதை நாங்கள் அறியவும், எங்களை மன்னித்து ஏற்கின்ற உம்மைப்போல நாங்களும் மன்னிக்கும் உள்ளம் உடையவர்களாக விளங்கிடவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.03.2020 தவக்காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. விப 17: 3-7 II. உரோ 5: 1-2, 5-8 யோவா 4: 5-42

கிறிஸ்துவோடு இணைந்து நம்பிக்கைக் கொண்டவர்களாய் வாழும் சகோதரர், சகோதரிகளே, திருஅவையானது தவக்காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு நம் அனைவரையும் அன்போடு அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் எகிப்திலிருந்து வியத்தகு முறையில்

அழைத்து வந்த வாழ்வளிக்கும் ஊற்றான ஆண்டவரை இஸ்ரயேல் மக்கள் மறந்துவிட்டு தண்ணீருக்காக முணுமுணுக்கிறார்கள். இரண்டாவது வாசகத்தின் வழியாக இயேசு கிறிஸ்துவின் துன்பங்கள், பாடுகள் அவர் உயிர்த்தெழுதலுக்குப் பாதையானது. நற்செய்தி வாசகத்தில் இயேசுவுக்கும் சமாரியப்பெண்ணுக்கும் இடையில் நீண்ட உரையாடல் நடக்கிறது. இந்த உரையாடல் மூலம் சமாரியப்பெண் இயேசுவை ஓர் இறைவாக்கினராகவும், மெசியாவாகவும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படுகிறது. இயேசுவை தன் இன மக்களுக்கு "இவர்தான் மெசியா" என்று தைரியமாக அறிவித்து சமாரிய இனம் முழுவதும் இயேசுவை பின்பற்றிச் செல்ல வழிவகுத்து முதல் சீடத்தியாக மாறி இயேசுவைப் பின்தொடர்ந்து செல்கிறார். இன்று நமது உறவுகளுக்கிடையே உரையாடலின்றி, உறவின்றி வாழும் நிலைமாறி ஒருவருக்கொருவர் உரையாட முன்வருவோம். இயேசுவுடன் நாம் நெருங்கிவந்து நம்முடைய உள்ளத்தைத் திறந்து அவருடன் உரையாடி, நமக்குள்ள உறவை ஆழப்படுத்திக்கொள்ள இந்தத் திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நிலைவாழ்வளிக்கும் ஊற்றாகிய இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் உமது உயிர்தரும் வார்த்தைகள்மூலம் ஒருவருக்கொருவர் உறவாடி, நம்பிக்கையைப் பலப்படுத்தி, உறவுச் சமூகமாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் இறைவா, என் ஆயன் ஆண்டவர் எனக்கேதும் குறையில்லை என்ற உமது வார்த்தைக்கேற்ப எம் நாட்டுத்தலைவர்கள், எம்மையாளும் ஆட்சியாளர்கள் இயற்கையை அழிக்கும் நோக்கத்தோடு தனிநபர் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தில் ஆட்சியை நடத்திச்செல்லாமல் அனைவரின் நலனுக்காகவும் ஆட்சி நடத்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, எம் நாட்டில் வாழும் அனைத்து நோயாளிகளையும் நீர் ஆசீர்வதித்து குணமளித்திட உம்மை மன்றாடுகிறோம். அவர்கள் தனிமையில் இருக்கும்போது அவர்களுக்கு உற்ற தோழனாகச் செயல்பட எமது நேரங்களை ஒதுக்கி அவர்களைப் பாதுகாக்கும் மனநிலைப்பெற உம்மை மன்றாடுகின்றோம்.

4. உறவை வளர்க்கும் இறைவா, எம் இளைஞர்கள் பெற்றோர்களுடனும், உடன்பிறந்தவர்களுடனும் உறவை வளர்த்து அதன் வழியாக உம்மோடு நட்புறவுக்கொண்டு நல்லதொரு உறவுச் சமூகமாகத் திகழ வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 17.03.2020 புனித பேட்ரிக் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

கிறிஸ்து இயேசுவில் பிரியமான இறைமக்களே, இன்றைய தினம் புனித பேட்ரிக் விழாவைச் சிறப்பிக்க திருஅவை நம்மை அழைக்கின்றது. புனித பேட்ரிக் கால்போர்ன், கொன்செஸ்ஸா என்னும் பெற்றோருக்குப் பிறந்தார். இவரது தந்தையான கால்போர்ன் ஒரு நீதிபதியாக இருந்தவர். பிரிட்டனில் இருந்த இவரை இவரது 16வது வயதில் அடிமையாக சிறைப்பிடித்து ஆறு ஆண்டுகள் அயர்லாந்தில் ஆடுகளை மேய்க்கும் பணியாளனாக அடிமைப்படுத்தினார். உறங்கும்போது கடவுளின் தூதர் முதல்முறை காட்சியளித்து தப்பித்துப்போகக் கூறினார். ஒரு கப்பல் மாலுமியின் தயவால் தப்பித்து பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தார். அங்கு துறவற மடத்தில் சேர்ந்து பயின்று குருப்பட்டம் பெற்றார். இரண்டாவது முறையாக கடவுளின் தூதர் காட்சியளித்து கடவுள் அழைப்பதாகக் கூறினார்.

அதன்பின் திரும்பவும் அயர்லாந்துக்குச் சென்று அங்கு மக்களுக்கு வேதம் போதித்து மக்களை இயேசுவின்பால் மனந்திருப்பும் அரிய சேவையைச் செய்து வந்தார். இவரின் சேவையைப் பாராட்டி திருத்தந்தை முதலாம் செலஸ்தின் இவரை அயர்லாந்தின் ஆயராக நியமித்தார். இவரின் பணிகளைக் கண்ட அந்நாட்டு அரசன், புனித பேட்ரிக் மற்றும் அவரது தோழர்களான புனித பிரிஜித், புனித கொலும்பா ஆகியோரையும் பிடித்து அரசவையில் நிறுத்தினான். அங்கும் நமது புனிதர் இயேசுவின் நற்செய்தியை அழகாக எடுத்துரைத்து, ஒரே கடவுள் மூன்று ஆட்களாயிருக்கிறார் என்பதையும் கூறினார். அரசனால் அதைப் புரிந்துக் கொள்ள இயலாததால், அருகே இருந்த "சாம்ராக்" என்னும் செடியின் இலையைப் பறித்து, இலை மூன்று பிரிவுகளாக இருப்பதை சுட்டிக்காட்டி இதுபோல் தான் கடவுளும் மூன்று ஆட்களாயிருக்கிறார் என்பதை விளக்கினார். அதன்பின் அரசன் அதைப் புரிந்துக்கொண்டு மக்களோடு தானும் கிறிஸ்துவத்தில் இணைந்தான். அயர்லாந்தில் பெரும்பான்மையோர் கிறிஸ்துவத்தில் இணைய "அயர்லாந்தின் அப்போஸ்தலர்" என்னும் பட்டத்தையும் பெற்றார் நம் புனிதர். இப்புனிதரைப் போலவே நமக்கும் நற்செய்தியை அறிவிக்கும் கடமை உள்ளது என்பதனை உணர்ந்து இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், திருநிலையினர் அனைவரும் திருமறையின் புனிதத்துவத்தை உணர்ந்து, அதைப் பின்பற்ற வேண்டிய தேவையையும் உணர்ந்து, எம்மைப் புனிதர்களாக வழிநடத்திட வேண்டிய வரத்தை அளிக்க உம்மை மன்றாடுகிறோம்.
2. தூயவரான இறைவா, அழைக்கப்பட்டவர் பலர், தேர்ந்தெடுக்கப்பட்டவர் சிலர் என்ற வாய்மொழிக்கு சாதகமாக வாழ்ந்த புனித பேட்ரிக்

புனிதரைப் போன்று இறையழைத்தலின் மேன்மையைக் கண்டுணர்ந்து இக்கால இளைஞர்கள் உம் பணிக்கு முன்வர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. நித்திய வாழ்வின் ஒளியே இறைவா, மக்கள் அமைதியாக வாழ்ந்துவரும் இச்சூழலில் அரசியல் சட்ட சீர்த்திருத்தங்கள், புதிய சட்ட அமைப்புகள், மக்களை அமைதியற்ற சூழலுக்குத் தள்ளாமல், ஒற்றுமையே நாட்டின் சக்தி என்பதை உணரும் வரத்தை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 18.03.2020 எருசலேம் நகர் புனித சிரில் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

எருசலேம் நகரின் ஆயராகப் பணியாற்றிய நாட்களில் இவர் மும்முறை நாடு கடத்தப்பட்டார். ஆரியப் பதிதத்தை ஒழிக்கும் திட்டத்தில் புனித அத்தனாசியாருடன் இவர் ஒத்துழைத்தார். இவர் எழுதி வைத்துச் சென்ற திருமறை விளக்கம் இன்றுவரை திருஅவையில் விலைமதிக்கப்படாத செல்வமாகத் திகழ்கிறது. நமது ஞான வாழ்வுக்கு மையமாக விளங்கும் நற்கருணையைப் பற்றி இவர் தரும் போதனையில் இவருக்கு நிகர் இவரே. எருசலேமின் ஆயராக நியமனம் பெற்ற மறு ஆண்டில் மிகப்பெரிய சிலுவை ஒன்று ஒளிமயமாய் விண்ணில் காணப்பட்டுக் கல்வாரி மலையின் மேல் இறங்கி, இன்னும் மிக அதிகமான ஒளிமயமாகப் பல மணி நேரம் ஒளிர்ந்ததை இவரும் எருசலேம் மக்களும் கண்டு வியந்தனர். இக்காட்சிக்குப்பின் கிறிஸ்தவர்கள் நம்பிக்கையில் உறுதிப்பட்டனர். இயேசுவை அறியாத பலர் மெய்மறையில் வந்து சேர்ந்தனர்.

மேலும் இப்புனிதர் திவ்ய நற்கருணையைப் பக்தியோடும் விசுவாசத்தோடும், தகுந்த தயாரிப்போடும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அந்நாட்களிலே வலியுறுத்தினார். நமது கைகளில் தங்கம் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறதோ அதைவிட பன்மடங்கு புனிதமான மறைபொருள் நற்கருணையை கறைப்பாமல் பக்தியோடு உட்கொள்ள வேண்டும் என்று திவ்ய நற்கருணைப் பக்தியை மிகவும் ஆழமாக எடுத்துரைத்தார். இன்றைய நாளைச் சிறப்பிக்கும் இப்புனிதரின் நற்கருணைப் பக்தியை நாமும் பின்பற்றி நடக்கவும் நற்கருணை வழியாக நம்முடைய நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளவும் அருள் வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருஅவையை நேரிய பாதையிலும் பக்தியிலும் வழிநடத்திச் செல்லும் வரத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் உம்மை நோக்கிச் செபிக்கும் அனைவரின் எண்ணங்கள்,

எதிர்பார்ப்புகள், தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி அனைவரையும் உமது பாதுகாப்பில் வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. தூய்மையின் இருப்பிடமே இறைவா, எங்களுக்காக நீர் கையளித்த உமது உடலும் இரத்தமுமான திவ்ய நற்கருணை மீது நம்பிக்கைக் கொள்வதும் நற்கருணை வழியாக எங்கள் ஆன்மாவை தூய்மையாகவும் உமது ஆலயமாகவும் வைத்துக் கொள்ளும் கிருபையைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

## 19.03.2020 மரியாவின் கணவர் புனித யோசேப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்புக்குரியவர்களே, கன்னி மரியாவின் கணவரான புனித யோசேப்பு பெருவிழாவை நாம் இன்று கொண்டாடுகின்றோம். விவிலியத்தில் ஒரு வார்த்தையும் பேசாத யோசேப்பின் செயல்கள், அவரது தனித்துவத்தை நமக்கு எடுத்துரைக்கின்றன. தமக்கு மண ஒப்பந்தமான பெண்ணை இழிவுப்படுத்த விரும்பாத மனம், அவரது உயிரைக் காப்பாற்ற விரும்பிய சிந்தனை, கடவுளின் திட்டத்தை அறியக் காத்திருந்த பொறுமை, திருச்சட்டத்தை மதித்து வாழ்ந்த நேர்மை, கனவில் வெளிப்பட்ட வானதூதரின் செய்தியை மட்டுமே கொண்டு மரியாவை மனைவியாக ஏற்றுக்கொண்ட பெருந்தன்மை என யோசேப்பு மிளிர்கிறார். மரியாவின் கணவர் புனித யோசேப்புக்கு நிகராகப் பெருந்தன்மை கொண்ட ஒருவரை உலக வரலாற்றில் நாம் கண்டறிவது கடினம். பேச்சில் அல்ல, தமது செயலில் கடவுளின் மீட்புத் திட்டத்துக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியவர் புனித யோசேப்பு. கணவராக மரியாவையும், தந்தையாக இயேசுவையும் அரவணைத்த அவரது கரங்கள் பேறுபெற்றவை. மண்ணகத்தில் இயேசுவின் தந்தையாக வாழ்ந்த அவர், விண்ணகத்திலும் மாட்சி மிகுந்த அரியணையில் வீற்றிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. நமது வாழ்வின் நெருக்கடிகளில் புனித யோசேப்பைப் போன்று, கடவுளின் விருப்பதிற்கேற்ப முடிவெடுக்க வரம் வேண்டி இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உண்மையின் ஊற்றே இறைவா, புனித யோசேப்பின் பெருவிழாவைச் சிறப்பிக்கும் இந்நாளில், உமக்கு உண்மையுள்ளவர்களாய் மேலும் வாழும் மனதை, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வின் வள்ளலே இறைவா, எங்கள் குடும்ப வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற பிரச்சனைகள் மற்றும் நெருக்கடிகளுக்கு, புனித யோசேப்பைப் போன்று உமது உதவியால் விவேகமுள்ள தீர்வு காண உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. மீட்பின் நாயகரே இறைவா, எங்கள் நாட்டையும் மக்களையும் வழிநடத்தும் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள், அனைத்து சூழ்நிலைகளிலும் புனித யோசேப்பைப் போன்று நேரிய மனம் கொண்டவர்களாய் வாழ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
4. மாட்சியின் மகுடமே இறைவா, உம்மால் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அனைவரையும் அன்புடனும், அக்கறையுடனும், பராமரிக்கவும், அதனால் ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் சகிக்கவும் நல்ல மனதை வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 22.03.2020 தவக்காலம் நான்காம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. 1சாமு 16: 1, 6-7,10-13 II. எபேசி 5: 8-14 யோவா 9: 1-41

தவக்காலம் இறைமனித உறவைப் புதுப்பிக்கும் காலம். சுருங்கிய நமது இதயத்தை விரிவடையச் செய்யும் காலம். சுயநலத்தால், ஆணவத்தால், அதிகாரத்தால் தேங்கி நாற்றமெடுக்கும் குட்டையான நம் வாழ்வைப் பாய்ந்தோடும் நதியாக மாற்றும் காலம். நம் கிறிஸ்தவ வாழ்வை அலசி ஆராய்ந்து தவறுகளைக் களைந்து நேரிய வழியில் நாம் தொடர்ந்து நடக்க இறைவன் தந்த ஒப்பற்ற காலம்தான் இத்தவக்காலம். இக்காலத்தில் ஆண்டவரோடு இணைந்து ஒளியின் மக்களாய் வாழ முயல்வோம். மனிதர் பார்ப்பதுபோல் ஆண்டவர் நம்மைப் பார்ப்பதில்லை, மனிதர் முகத்தை பார்க்கின்றனர், ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார். இக்கூற்றுக்கிணங்க நாம் செயல்பட வேண்டும். வெளி ஆடம்பரம் காட்டி உள்ளே பாவத்தில் உழலும் மனிதர்களின் குற்றங்களை எடுத்துக்கூறி, மனமாற்றத்தை அவர்களுக்கும் கொடுத்து, ஒளியின் மக்களாய் மாற்ற முயற்சி செய்ய வேண்டும். நாமும் நமது போலி வாழ்விலிருந்து மாய உலகத்தின் கவர்ச்சியிலிருந்து சுயநலப்போக்கிலிருந்து, நான் என்ற அகந்தையிலிருந்தும் கண்டிப்பாக மாறவேண்டும். அன்று மதலேன் மரியா, சக்கேயு, கல்வாரியில் கள்வன் இவர்களைப் போல் நாமும் மனம்வருந்தி மனம்மாறி வாழ செபம், தவம், தியானம், தானம் இவற்றின் வழியாக இத்தவக்காலத்தைச் சிறப்பிக்க இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், இவர்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களின் பணிவாழ்வில் ஏற்படும் அனைத்து சோதனைகளையும், தடுத்து ஆட்கொண்டு வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் தந்தையே இறைவா, இறைவனின் கண்ணோட்டம் வேறு, மனிதரின் கண்ணோட்டம் வேறு என்பதை உணர்ந்து அதன்படி வாழ்ந்து இயேசுவின் சாட்சிகளாய் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகின் ஒளியே இறைவா, "நானே உலகின் ஒளி" என மொழிந்தவரே, எம் இளைஞர் இளம்பிள்ளைகளை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களை இருளின் பாதையிலிருந்து காத்து உமது ஒளியின் மக்களாக வாழ வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

4. துன்புறுத்துவோருக்காக வேண்டுங்கள் என்று மொழிந்தரே, சிலுவையில் அறையப்பட்ட வேளையிலும் பிறருக்காக மன்றாடி நீர்காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி நாங்களும் எங்களின் பாவங்களுக்காக மன்றாடும் தாராள உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.03.2020 ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

I. எசா 7: 10-14, 8:10 II. எபி 10: 4-10 லூக் 1: 26-38

இறையன்பில் நம்பிக்கையுடன் வாழும் சகோதர சகோதரிகளே, நமது ஆதிப்பெற்றோர், கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனதால், நாமும் தொடக்க நிலை பாவத்திற்கு ஆளாக்கப்பட்டோம். பேரன்பு மிக்க இறைவன் இரக்கம் கொண்டதால், மீட்பின் திட்டத்தை வாக்களித்தார். காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்குட்பட்டிருந்த நம்மையெல்லாம் மீட்டு நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக்குமாறு, கடவுள் பெண்ணிடம் பிறந்தாக வேண்டும் (கலா 4:4) என்பது மீட்புத் திட்டம். இவ்விழா கடவுள் நம்முள் ஒருவரானார் என்பதை உணர்த்துகிறது. கி.பி. 431ல் நடைபெற்ற எபேசு சங்கத்திற்குப் பிறகு இந்த விழா திருஅவையில் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகள் காத்திருந்து, கன்னிமரியாவுக்கு மங்கள வார்த்தைச் சொல்லும் காலம் நிறைவேறிவிட்டது. கடவுள் கன்னிமரியாவிடம் கபிரியேல் வானதூதரை அனுப்புகிறார். தூதர் வாழ்த்துரைக்கிறார்.

இவ்வாழ்த்துரை மீட்பு வரலாற்றில் மங்களகரமானதாக அமைகிறது. மரியாவின் வாழ்வில் அவர் முழு சுதந்திரத்துடன் இறைத்திட்டத்தை ஏற்று கடவுளோடு உடன் உழைப்பாளர் (1கொரி 3:9) என்ற மனநிலையோடு, மற்றெந்த மானிடப் பிறவியைவிட வெகுவாய் இறையருளோடு மீட்பரின் தாயாகத் தன்னை இறைவன் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை அறிந்ததும் முழு மனச் சம்மதத்துடன் மரியா தன் ஒப்புதலைத் தருகிறார். இந்த ஒப்புதல்தான் மனித குலத்திற்கான மீட்பின் கதவு திறக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது. அக்கணமே "இறைவார்த்தை" மரியாவின் கருவில் உடல் எடுத்தது. மரியாவின் சதையையும், இரத்தத்தையும் கொண்டு இயேசுவின் உடல் வளர்ந்தது. பேராயர் புல்டன் ஷீன் அவர்கள் இது குறித்துக் கூறும்போது, முதல் மனிதனின் வீழ்ச்சி எப்படி சுதந்திரமான நடவடிக்கையாக இருந்ததோ, அதுபோலவே மனித மீட்பும் சுதந்திரமாக நடைபெறவேண்டும். மரியாவுக்குத் தூதனுப்பிய அந்த நிகழ்வில் கடவுள்

தான் படைத்த உயிரிடம் (மரியாவிடம்) தன்னை மனிதத்துக்குள் இணைத்துக்கொள்ள உதவுமாறு, மரியாவின் சுதந்திரமான ஒத்துழைப்பை நாடினார் என்று சொல்கிறார். மேலும் மரியாவைத் தன் தாயாகத் தேர்ந்துக் கொள்கிறார். எனவே, நாமும் இயேசுவின் தாய் மரியாவை நம்முடைய தாயாக ஏற்றுக்கொண்டு, நமது மீட்புக்கு முழுமனத்தோடு சம்மதிக்க, பக்தியோடு இப்பெருவிழாத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. என் இறைவா, உம் திருவுளமே என் வாழ்க்கை, கத்தோலிக்கத் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், அவர்களின் வழியில் கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் தாம் புனித வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணரவும், வறியோர், சிறியோர் மட்டில் அக்கறைக்காட்டி அவரவர் தேவைக்கேற்றபடி உதவி செய்யத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நிலவுலகை நீதியுடனும், மக்களினங்களை உண்மையுடனும் அவர் தீர்ப்பிடுவார். உலகிலும் நாட்டிலும் நீதியின் கரம் வலுப்படவும், நேர்மையுள்ள தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் சுயநலத்தை விடுத்து, அனைத்து துறை அதிகாரிகளும், இந்திய ஜனநாயகத்திற்கு ஊறுவிளைவிக்காமல், சிறுபான்மையினரின் தேவைகளை உணர்ந்து ஆட்சி புரியவும் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே ஆகட்டும்" எங்கள் பங்கின் ஒவ்வொரு குடும்பத்தையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். உமது அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் வாழத் தடையாக உள்ள கடன் தொல்லைகள், விநோத நோய்கள், போதைப் பழக்கம் முதலியவற்றுக்கு குடும்பத் தலைவரும் இளைய சமுதாயமும் அடிமையாக வாழ்வதிலிருந்து விடுபடத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. "உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்தார்" ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், அனாதைகள், விதவைகளுக்கு சமூக அக்கறையுடன் கூடிய நீதியை வழங்கவும், உமது உதவிக் கரத்தை அவர்களுக்கு அளித்தருளவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 29.03.2020 தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. யோவேல் 2: 12-18 II. 2கொரி 5: 20-6:2 மத் 6: 1-6, 16-18

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, மரண பயம் உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் உள்ளது. சில தொண்ணூறுகளும் சாவைக்கண்டு பயப்படுகின்றனர். சில இருபதுகள், கொள்கைக்காகச் சாவைத் தேடிச் செல்கின்றனர். பாவத்தில் வாழ்பவனும், அருள்நிலை இழந்தவனும் இந்த சாவைக்கண்டு பயந்து தினமும் செத்துக்கொண்டிருக்கிறான். இன்றைய நாள் "உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கைக் கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்" என்னும் நம்பிக்கை வார்த்தைகளால் வாழ்வு கொடுக்கிறார் இயேசு. இறந்தவர்களுக்கு உயிர்கொடுத்தல் என்பது இயேசுவுக்குப் புதிதல்ல. ஆனால் இலாசரை உயிர்ப்பிக்கும் நிகழ்வுக்கென்று ஒரு வேறுபாடு உண்டு - ஒரு சிறப்பு உண்டு. கடவுளின் வல்லமை வெளிப்படுவதற்காக, இயேசு பொறுமையோடு அந்தத் தருணத்திற்காகக் காத்திருக்கிறார். ஆம் அன்பர்களே, கடவுளின் வல்லமை நம்மில் செயல்பட நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு அழைப்பு விடுக்கிறது. நமது வாழ்விலும் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் கண்ணீர் வருகிறபோது கடவுளின் வல்லமை நமது வாழ்வில் வெளிப்பட இது ஒரு வாய்ப்பு என்கிற நம்பிக்கை நமக்கு வரவேண்டும். அந்த வல்லமை வெளிப்படுவதற்கு நாம் பொறுமைகாக்க வேண்டும். கடவுளால் இவ்வுலகத்தில் ஆகாதது ஒன்றுமில்லை என்கிற விசுவாசம், வாழ்வை மகிழ்ச்சியாக எதிர்க்கொள்ள நமக்கு வழிவகுக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையைத் தரவேண்டி தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. என்றென்றுமுள்ள இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் இறைவா, இன்றைய நற்செய்தியில், நீர் எந்தளவுக்கு எம்மீது மனமிரங்குகிறவராக இருக்கிறீர் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடிகிறது. அதேபோல எம் வாழ்விலும் உமது அன்பையும் இரக்கத்தையும் முழுமையாக உணர்ந்தவர்களாக, உண்மையுள்ளவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். என்னிடம் நம்பிக்கைக் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் என்றுரைத்த இறைவா, இறப்பையும் இழப்பையும் தாண்டி புது வாழ்வு பெறுவதுதான்

நீர் கற்றுத்தந்த வாழ்க்கைத் தத்துவம் என்பதில் நம்பிக்கைக் கொள்ளத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பொறுமையின் நாயகனே இறைவா, கடவுளின் வல்லமை எம்மில் செயல்பட நாங்கள் பொறுமையோடு காத்திருக்க வேண்டிய உள்ளத்தைத் தந்தருளும். உமது வல்லமை வெளிப்பட எமது வாழ்வு ஒரு ஊன்றுகோலாக இருக்கும் என்றால் அதற்காகக் காத்திருக்கும் மன உறுதியைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

### மரியாவின் கணவர் புனித யோசேப்பு வாழ்வு தரும் பாடம்

**முன்னுரை** திரு. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, நமது கத்தோலிக்கத் திருஅவை மார்ச் 19ஆம் நாளில் கன்னி மரியாவின் கணவரான புனித யோசேப்பு பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. விவிலியத்தில் அமைதியான ஒரு மனிதராகக் காட்சியளித்தாலும், மீட்புத் திட்டத்தில் மிகவும் முக்கியமானவராகத் திகழ்ந்தவர் புனித யோசேப்பு. மரியா மற்றும் குழந்தை இயேசுவைப் பாதுகாக்கும் பொறுப்பை இவரிடமே தந்தையாம் கடவுள் அளித்தார். இத்தகைய சிறப்பே இவரைத் திருஅவையின் பாதுகாவலராக உயர்த்தியுள்ளது. மனிதராகப் பிறந்த இறைமகனின் "தந்தை" என்று மக்களால் கருதப்பட பேறுபெற்றவர் புனித யோசேப்பு. "மரியாவின் கணவர் யோசேப்பு. மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு" (மத்தேயு 1: 16), "இயேசு யோசேப்பின் மகன் என்று கருதப்பட்டார்" (லூக்கா 3: 23), "நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பின் மகன் இயேசு" (யோவான் 1: 45) என்று நற்செய்தி நூல்கள் இவரது முக்கியத்துவத்தைப் பதிவு செய்கின்றன. இயேசுவை உருவாக்கியவர் புனித யோசேப்பு என்பதே மேற்கண்ட வசனங்களின் அர்த்தமாக உள்ளது.

யோசேப்பு கடவுளுக்கும் திருச்சட்டத்துக்கும் மதிப்பளித்து நேர்மையாளராக வாழ்ந்தார் என்று மத்தேயு நற்செய்தியாளர் பதிவு செய்கிறார். கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து கன்னி மரியாவுக்குப் பிரமாணிக்கமுள்ள கணவராக நடந்து கொண்டார் என்பது மத்தேயு, லூ க்கா ஆகியோர் தருகின்ற செய்திகளில் இருந்து தெரிகிறது. கடவுளின் திட்டத்தை ஏற்று இறைமகன் இயேசுவுக்குப் பொறுப்புள்ள தந்தையாகச் செயல்பட்டார் என்பதற்கு அனைத்து நற்செய்திகளுமே சான்று பகர்கின்றன. தமக்கு மண ஒப்பந்தமான கன்னி மரியா கருத்தாங்கி, கல்லெறியப்பட வேண்டிய ஒரு நெருக்கடியைச் சந்தித்த வேளையில், "எடுத்தோம் - கவிழ்த்தோம்" என்றொரு முடிவை யோசேப்பு எடுக்கவில்லை. மரியா என்ற இளம்பெண்ணின் எதிர்காலம் குறித்து பரிவுடன் சிந்தித்த ஓர் இளைஞராக இவரை நாம் காண்கின்றோம். திருமணத்திற்கு முன்பு கருவுற்றது மரியா செய்த தவறு என்று கருதாமல், மரியாவின் தன்

மதிப்பு காப்பாற்றப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் யோசேப்பு நிதானமாகச் செயல்படுகிறார்.

யோசேப்பு சட்டத்தை விடவும் மனிதநேயத்துக்கு முதலிடம் கொடுத்து, இருவருக்கும் பிரச்சனை ஏற்படாத வகையில் மரியாவை மறைவாக விலக்கிவிடத் திட்டமிடுகிறார். தாமே ஒரு முடிவெடுக்க மனதின்றி, கடவுளின் விருப்பத்துக்கு அனைத்தையும் ஒப்படைத்துவிட்டு அமைதியான உறக்கத்தில் ஆழ்கிறார். புயல் போன்ற ஒரு பிரச்சனையைச் சந்தித்த வேளையில் உறங்கினார் என்றால், கடவுள்மீது எந்த அளவுக்கு யோசேப்பு நம்பிக்கை கொண்டிருந்திருக்க வேண்டும்? பிரச்சனைகள், போராட்டங்கள் நம்மைச் சூழும்போது, கடவுளின் திட்டத்திற்கு நம்மை ஒப்படைக்க இவர் நமக்கு கற்றுத் தருகிறார். கடவுள்மீது நம்பிக்கைக் கொண்ட யோசேப்புக்குப் பதிலளிக்க விரும்பி, கடவுள் தமது தூதரை அனுப்பி வைக்கிறார். "கன்னி மரியா கருவுற்றதற்கு தூய ஆவியே காரணம்" என்ற தெளிவைப் பெற்றதும், அவரைத் தமது மனைவியாக யோசேப்பு ஏற்றுக் கொள்கிறார். ஒரு கணவருக்குரியப் பொறுப்புகளை உணர்ந்தவராய், இறைமகனைக் கருத்தாங்கிய மரியாவுக்குத் தேவையான அனைத்தையும் அக்கறையுடன் செய்ததைக் காண்கிறோம். மரியாவின் வயிற்றில் வளர்வது தமது குழந்தையில்லை என்று அறிந்திருந்தாலும், கடவுளின் திட்டம் நிறைவேறும் வகையில் மரியாவின் பிரமாணிக்கமுள்ள வாழ்க்கைத் துணைவராகச் செயல்படுகிறார்.

யோசேப்பு மரியாவைத் திருமணம் செய்ததால் அவருக்கு கணவரானது மட்டுமின்றி, இறைமகனின் வளர்ப்புத் தந்தையாக இருக்கவும் அழைப்பு பெறுகின்றார். விண்ணகத் தந்தையின் பதிலாளாக இருந்து அவரது மகனை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு புனித யோசேப்புக்கு வழங்கப்படுகிறது. எவ்வளவு மேன்மையான அழைப்பு. இறைமகனை "மகனே" என்று அழைக்கும் உரிமையைப் பெற்றதோடன்றி, அவர் இவரை "அப்பா" என்று அழைத்தார் என்பது எத்தனைப் பெருமை. இயேசுவின் மண்ணகத் தந்தை என்ற முறையில், அவரது வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் யோசேப்பு திகழ்ந்தார் என்பதில் சந்தேகமில்லை. மனிதராகத் தோன்றிய இறைமகனுக்கு "இயேசு" என்று பெயரிட்ட வேளையில், திருச்சட்டத்தின்படி அவரது தந்தையானார் யோசேப்பு. "நம் ஆண்டவரைத் தூக்கிச் சுமக்கும் அருளையும் பெரும் பேற்றையும் யோசேப்பு பெற்றிருந்தார். அடிக்கடி அவரது ஆசிபெற்ற கரங்களில் இருப்பதிலேயே நம் ஆண்டவர் மிகுந்த இன்பம் கொண்டார். மனிதராகத் தோன்றியத் தம் ஒரே மகன் இயேசுவுக்கு கல்வி கற்பிக்க, கடவுள் தேர்ந்தெடுத்த யோசேப்பு எவ்வளவு பாராட்டுக்குரியவர்" என்று புனித பிரான்சிஸ்கு சலேசியார் வியந்துரைக்கிறார்.

ஒரு குடும்பத் தலைவர் எப்படி தமது மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வைப் புனித

யோசேப்பிடம் இருந்து நாம் கற்க வேண்டும். தமது வாரிசை வயிற்றில் சுமக்கவில்லை என்றாலும், கன்னி மரியாமீது புனித யோசேப்பு காட்டிய அன்பும் அக்கறையும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. மரியாவின் மகனான இயேசுவைக் காப்பாற்ற யோசேப்பு மேற்கொண்ட முயற்சிகள், அவரது பெருந்தன்மையையும் கடவுளின் திட்டத்திற்குக் கீழ்ப்படியும் மனதையும் காட்டுகின்றன.கடவுளால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை முழுமனதுடன் நிறைவேற்றியவர் புனித யோசேப்பு என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. முதலில் மரியா கல்லெறிந்து கொலை செய்யப்படாமல் காத்தார், இறைமகனின் பிறப்புக்குத் தேவையான தயாரிப்புகளைச் செய்தார், பின்பு குழந்தை இயேசுவின் உயிரை ஏரோதுவின் கொடிய கரங்களில் இருந்து காப்பாற்றினார், அவரை வளர்த்தெடுத்து மனிதகுல மீட்பராக உருவாக்கினார். எளியோரை அரவணைக்கவும், பிறரை மன்னித்து ஏற்கவும், சமூக அநீதிகளை எதிர்க்கவும் யோசேப்பிடம் இருந்தே இயேசு கற்றுக்கொண்டார் எனில் உண்மையிலும் உண்மை.

நாசரேத்தில் வாழ்ந்த ஓர் எளிய தச்சுத் தொழிலாளியை, இறைமகனையும் அவரது தாயையும் பராமரிக்கும் நம்பிக்கைக்குரிய ஊழியராக கடவுள் தேர்ந்தெடுத்தது எவ்வளவு சிறப்பானது. யோசேப்பின் நேர்மைக்கும் பெருந்தன்மைக்கும் கிடைத்தப் பரிசே மீட்புத் திட்டத்தில் அவருக்குக் கிடைத்த மேன்மையான பொறுப்பு என்று கூறலாம். விண்ணோருக்கு அரசியாக இருக்கின்ற இறையன்னையைத் திருமணம் செய்ததன் வழியாக, விண்ணோர் அனைவருக்கும் அரசராக யோசேப்பு திகழ்கிறார்" என்று புனித லெயோனார்து புகழ்கிறார். பொறுப்பு நிறைந்த கணவராகவும், அன்புள்ள தந்தையாகவும் செயல்படுவது எப்படி என்பதற்கு புனித யோசேப்பு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார். கடவுளின் விருப்பத்துக்கு நம்மையே முழுமையாகக் கையளித்து வாழவும், கடவுளால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அனைவரையும் பொறுப்புடன் பாதுகாக்கவும், அதனால் வருகின்ற துன்பங்களைத் துணிவுடன் ஏற்கவும் இவரது வாழ்வில் நாம் பாடம் கற்கிறோம். புனித யோசேப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி, நமது குடும்பத்தில் உள்ள அனைவரையும் அரவணைத்து வாழ்வோம்.

## புனித பெர்பேத்துவா - பெலிசித்தா இவர்கள் யார்?

திருமதி. ராணிவில்சன்

"வீரமுடன் அஞ்சா நெஞ்சத்துடன் கிறிஸ்துவுக்காகப் பாடுகளை ஏற்றுக்கொள்ளுங்கள்"

உலகெல்லாம் உய்யவே உயர்வழி காட்ட
நிலமிசை புகழ்பெற நீதியை நிலைநாட்ட
கலக்கம் தரும் ஊழ்தனை வென்றிட
பலமதைத் தந்து பல இன்னல்களைப் போக்கிட
மின்னலாய் மறையும் மானிடர் வாழ்வு மதி முகமாகிட

ஒளி தருகின்ற உயர்வு பெறும் நன்னாளாகிட
நல்லறம் புரியும் நல்லார் நட்பு பெருகிட
கல்வியும் கருணையும் செல்வமும் பொங்கிட
அறமொழியும் அளவிலா இன்பமும் பெற்றிட
மதவெறி நீங்கி மன்பதை நிலைத்திட
திறன்மிகு வாழ்வும் செழிப்பும் சேர்ந்திட
இமையாய் கண்ணுடைய படைப்பின் நாதனைப் பணிந்து
நல்வினை நிகழ்த்தி நற்கதி தருவாய்
நின் காற்பாதத்தில் நாங்கள் சரணடைந்தோம்
எங்களை என்றும் ஏற்று காத்திட வேண்டிவோம்

என இளமையில் இரு மலர்கள் தம்மை முழுமையாய் இறைவனுக்கு அர்ப்பணித்த வரலாறு காண்போம்.

அறங்கள் அனைத்தும் தொலைத்தவர்களைத் தலைவர்கள் என்கிறோம். ஊழலில் சிறை சென்றவர்களைத் தியாகிகள் என்கிறோம். கொள்கை இல்லா கொள்ளையர்களை வள்ளல்கள் என்கிறோம். ஒழுக்கம் கெட்டு சுயநலமே இலட்சியமாய்க் கொண்டவர்களை ஆன்மீகவாதிகள் என்கிறோம். இவ்விரு தியாக மலர்களை நாம் என்னென்போம். இவர்களைப் பற்றிய குறிப்புகள் இல்லையென்றாலும் ஒரு சில நம்பகமான மிகத் தொன்மை வாய்ந்த தெளிவான விவரங்கள் கிடைத்துள்ளன. இவர்களது வீர மரணம் எப்படி நிகழ்ந்தது? ஏன் நிகழ்ந்தது? கி.பி. 203ம் ஆண்டில் உரோமையில் செப்டிமசு செவேரூசு என்ற கொடுங்கோலன் ஆட்சி நடந்துக் கொண்டிருந்தது. கிறிஸ்தவர்கள் என்றாலே உடனே கொல்ல வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. திருத்தூதர்கள் எப்படி அச்சப்பட்டு, அடைப்பட்டு கிடந்தார்களோ அதே நிலை. ஆனால் இவ்விரு பெண்களும் மிகத் தீவிரமாக உறுதியோடு தாங்கள் கொண்ட மனநிலையிலிருந்து விலகாமல் புனித பவுலடியார் போல் இறை இயேசுவை ஏற்றுக்கொள்ள தீர்மானித்தார்கள். இவர்களின் மனநிலையை அறிந்த அரசன் அவரின் ஆணைக்கேற்ப கொலைச் செய்ய கைதியாக சிறை பிடித்தப்படுத்தப்பட்ட பின்னர் கூட இவர்களின் ஆர்வமும், பற்றும் குறையவில்லை.

பெர்பெத்துவா மிகப் பெரிய இடத்துப் பெண். திருமணமானவர், ஆண் குழந்தை உண்டு, அக்குழந்தையும் இவரோடு சிறையில் வாடியது. இவரது தந்தை பிரபு குலத்தைச் சேர்ந்தவர். இவர் திருமுழுக்கு பெறவில்லை. தினம் தினம் சிறைக்கு வந்து தன் மகளிடம் கெஞ்சி கெஞ்சிக் கேட்டுக்கொள்வார். மகளே, உனக்கு ஏன் இவ்வாதை? கொடுமை? என்னால் சகிக்க இயலவில்லை. மறுதலித்துவிடு மகளே, வேதத்தை, இறைஇயேசுவை என மனம் பொறுக்காமல் சலிக்காமல்

வந்து வந்து வேண்டினார். அதற்கு பெர்பெத்துவா பக்கத்தில் இருந்த ஒரு பாத்திரத்தைக் காட்டி அதற்கு என்ன பெயர் என கேட்டார். தந்தை ஒரு பெயரைக் கூறினார். அப்பா இதற்கு வேறு பெயர் இட இயலுமா எனக் கேட்டார். தந்தையோ திகைத்துப் போய் எப்படியம்மா வேறு பெயர் இட முடியும், முடியாது என்றார்.

## சிலுவையில் ஏழு வார்த்தைகள்

திரு. புல்லோன் ஜோ. லூயிஸ்

இயேசு, அதோ அவர்கள் திட்டமிட்டப்படி முத்தமிட்டு காட்டிக்கொடுக்கப்பட்டார். கை விலங்கு இட்டனர், கைது செய்தனர், கசையால் அடித்தனர், காரி உமிழ்ந்தனர், கன்னத்தில் அறைந்தனர், அங்கியைக் கிழித்தனர், சிவப்பங்கி உடுத்தினர், முள்முடி சூட்டினர், விசாரணைத் தீர்ப்புக்குட்படுத்தினர். மரண தண்டனை, அதுவும் சிலுவை மரணத்திற்கு தீர்ப்பளித்தனர். திரளான மக்கள் கூடியிருக்க, குற்றவாளிகள் இருவரையும், குற்றமற்றவரான இயேசுவையும் இழுத்துச் சென்றனர். அங்கே மரண தண்டனை நிறைவேற்றுவதைக் காண கூட்டம் அலைமோதியது. சிலுவையைச் சுமந்த இயேசுவை, சிலுவையே இப்போது சுமந்து நிற்கின்றது. கைகளையும், கால்களையும் மூன்று ஆணிகள் மட்டுமே தாங்குகின்றன. இயேசுவுக்கு ஆணிகளைத் தவிர ஆதரவு வேறொன்றுமில்லை. இவ்வாறு மரித்துக் கொண்டிருக்கும் தருணத்தில்கூட இயேசுவைப்போல் மறையுரை ஆற்றியவர் இல்லை. அவரது மறையுரையைக் கேட்க கூட்டம்... கூட்டம்... அப்பப்பா... இந்த மறையுரை தானே இயேசுவின் இறுதி ஏழு வார்த்தைகள். சாகும் தருவாயிலும் தன் ஏழு வார்த்தைகளால் எல்லா மக்களையும் தன்னிடம் ஈர்த்துக் கொண்டார். நாமும் அத்தெய்வீக வார்த்தைகளை இங்கு தியானிப்போம்.

### முதல் வார்த்தை

"தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னதென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக் 23 : 34)

**மன்னிப்பு:** இயேசு இவ்வாறு மன்றாடியதில் வியப்பில்லை. சிறுவயது முதலே அவர் மன்றாடிக் கொண்டிருந்தாராம். இன்று உலகில் மகிழ்வோடு பலர் இருக்கும்போது மன்றாடுவதில்லை. அதேவேளை துன்பம் மேலோங்கும்போது எவரும் மன்றாடத் தவறுவதுமில்லை. இச்சூழலில் நாமாக இருந்தால் கடவுளை நோக்கி எமக்கு உதவும் என்று வேண்டிக்கொள்வோம். ஆனால் இயேசுவோ, தமக்காக அன்று பிறருக்காக மன்றாடுகிறார். "இவர்களை மன்னியும்" யாரை மன்னிக்கும்படி மன்றாடுகிறார்? பகைவர்க்கு மன்னிப்பு.

- ♦ கொடூர குணம் படைத்த கோயில் குருக்களை
- ♦ ஆதிக்க வெறிப்பிடித்து அநீதியான அதிகாரத்திற்கு ஆதரவு தெரிவித்த

மக்கள் கூட்டத்தினரை

- ♦ அக்கிரம அரசியல்வாதிகளை
- ♦ தம்மைத் துன்புறுத்திய போர் வீரர்களை
- ♦ தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாசை
- ♦ தம்மை மும்முறை மறுதலித்த பேதுருவை

ஆம், பகைவர்களை மன்னியும் என்று சொன்னவர் வாழ்ந்து காட்டுகிறார். பகைவர்களுக்காக மன்றாடுங்கள் என்று சொன்னவர் விளக்கிக் காட்டுகிறார். ஏழு, எழுபது முறை என்பது எண்ணிக்கையைக் குறிப்பிட அல்ல. மன்னிப்பது எல்லையற்றதாக இருக்க வேண்டுமென்பதைக் குறிப்பிடவே. நாமும் இயேசுவின் போதனைப்படி, நமக்கெதிராக தவறு செய்யும்நம்சகோதரசகோதரிகளைமன்னிக்கின்றோமா? வேண்டுமென்றே, தெரிந்தே நமக்குத் தீமை செய்வோரை மன்னிக்கின்றோமா? நம்மை வெறுப்போரை, விரும்பாதவர்களை மன்னிக்கின்றோமா? சிந்திப்போம்.

## இரண்டாவது வார்த்தை

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (லூக் 23 : 43)

**மீட்பு:** இரண்டாவது வார்த்தை பகைவர்களுக்காக, பகை என்னும் தடுப்புச் சுவற்றைத் தகர்த்து எல்லையைத் தாண்டிப்போய் மன்றாடியது. இந்த இரண்டாம் வார்த்தையோ முதல் மன்றாட்டுக்குக் கிடைத்த பலனாய் இருக்கிறது. ஆம், இறந்துக் கொண்டிருப்பவர் இன்னொரு இறந்துக் கொண்டிருப்பவருக்காகக் கொடுத்த வாக்குறுதி. எதற்காக? சாகுந்தருவாயில் இருக்கின்ற மனிதர், செத்துக்கொண்டிருக்கும் இன்னொரு மனிதரிடம் முடிவில்லா வாழ்வைத் தரும்படி கேட்கிறான். "இயேசுவே நீர் அரசுரிமையோடு வரும்போது என்னை நினைவு கூறும்" என்று மன்றாடுகின்றான். சாவின் வாயிலும் ஒரு கள்வன், விண்ணகத்தைத் திருடிவிட்டு சாகின்றான். இயேசுவின் வழியாய் கிடைத்த மீட்பை, முதன் முதலாக பெற்றுக்கொண்டவன் இந்தக் கள்வனே. "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" என்பதே அவன் பெற்ற பேரின்பம். மரணத்திற்குப் பிறகு நியாயமாகத் தனக்கு வரவிருக்கும் நியாயத் தீர்ப்பையும் தேவ தண்டனையையும் நினைத்து கலங்கிய அவன் உள்ளம், இயேசுவிடம் இரக்கத்தை மன்றாடி, தன்னை நரகத் தண்டனையிலிருந்து மீட்டுக் கொள்கின்றது. நாமும், அவரிடம் நம் பாவங்கள், அக்கிரமங்கள் இவற்றிற்காய் மன்னிப்புக் கேட்போம், நிச்சயம் நம்மை மன்னிப்பார்.

## மூன்றாவது வார்த்தை

"இவரே உம் மகன்... இவரே உம் தாய்" (யோவா 19: 26 - 27)

**ஒன்றிப்பு:** சிலுவையில் தொங்கும் இயேசு, அருகில் அவரின் தாய் மரியாள், அவருடன் தான் அதிகமாக நேசித்த சீடர். கைவிடப்பட்ட நிலையிலிருப்பவர். கைவிடப்பட்ட நிலையில் இருப்பவருக்குத் தரும் ஆறுதல். ஆதாரம் அங்கே

அரங்கேறுகிறது. சிலுவையில் துயரப்பாடல் சுருதி ஏறிக்கொண்டிருக்கிறது. இந்த மரண வேதனையில் மனித வாழ்வு தொடங்க முடியுமா என்பதற்குச் சாட்சியாக, கல்வாரியில் அந்தக்காட்சி நிறைவேறலானது. தன் செல்வ மகனை இழந்த அந்த நேரத்தில் பிறர் பெற்ற மக்களாகிய நமக்குத் தாயாக்குகிறார். பெற்ற மகன் சிலுவையில் வேதனைப்பட்டவராய் உயிர்விட்டுக் கொண்டிருக்கும்போது, இந்த மகனின் பணியை இவ்வுலகில் செய்ய, இதோ நானிருக்கிறேன் என்று கூறி தனது தியாகத்தின் மூலம் இந்த உலகிற்கு தானம் செய்கிறாள். மானிட மீட்புக்காக தன் மகனோடு மனுக்குலம் முழுவதையும் ஏற்றுக்கொள்கிறாள் மகிழ்ச்சியோடு. ஆம், அதோ இயேசு தாமே, "இவரே உன் மகன்... இவரே உம் தாய்" என்று தன் தாயிடமும் தன் அன்புச் சீடரிமும் கூறுகிறார். அந்நேரம் முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார். இன்றோ நாம், உறவு என்ற ஒரு விட்டத்தைப் போட்டுக்கொண்டு சாதி, இனம், மொழி, வர்க்கம் என்ற வட்டத்திற்குள் உழன்று கொண்டிருக்கிறோம். வட்டங்களைத் தாண்டி வெளியே வரவேண்டும். குறுகிய எல்லை அழிக்கப்பட்டு சமுதாயமே, உலகமே எல்லை என்ற பரந்துபட்ட பார்வைக்குள் நம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதே இவ்வார்த்தை நமக்குத் தரும் அறைகூவல்.

## நான்காவது வார்த்தை

"என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத் 27:46)

**தத்தளிப்பு:** அதோ சிலுவையில் தொங்கிய இயேசுவை குறித்தே எள்ளி நகைக்கின்றனர். பாவத்தினால் இறைவனை விட்டகன்றதைக் காட்ட, பரமனே கைவிட்ட நிலையை உணர்ந்து கதறுகிறார். ஆனால் தந்தையின் உடனிருப்பு, பிறப்பு முதல் அவருக்கிருந்தது. பாலனாய் பிறந்தபோது வானில் நட்சத்திரமாய், ஏரோது அனைத்து ஆண் குழந்தைகளையும் கொன்றிட ஆணையிட்டபோது காப்பாற்றடப்பட்டவராய், திருமுழுக்கின்போது "என் அன்பார்ந்த மைந்தர் இவரே..." என்று வானிலிருந்து வந்த குரலாய் இருந்தார். மலைமேல் செபிக்கச் சென்ற இயேசுவிற்குத் துணைச் சென்ற சீடர்கள் உறங்கிடினும், தந்தையாம் இறைவனிடம் "உம் சித்தத்தின் படியே ஆகட்டும்" என்றே இங்கும் இறைவனின் உடனிருப்பை உணர்த்துகிறார்.

இயேசு சிலுவையில் தொங்கியபோது, உறவினர்கள் அவரைப் பிரிந்தனர். நண்பர்களான சீடர்களும் ஓடிப்போயினர். இயேசுவுக்குப் பிரியமான பேதுருவும் அவரை மறுதலித்தார். இயேசுவை மக்கள் கூட்டமே கைவிட்டுவிட்டது. இந்த வெறுமை நிலையே அவரை உறுத்துகிறது. "அப்பா" என்று அழைத்து செபிக்கக் கற்றுக்கொடுத்தவர் "என் இறைவா" என்றே கூப்பிடுகிறார். யார் கைவிட்டாலும், எப்போதும் இறைவனின் உடனிருப்பு இயேசுவுக்கு இருந்தது. ஆம்... சிலுவையில் தொங்கிய அந்த இறுதி வேளையில், சிலுவையைச் சுற்றி மூழ்கியிருந்த காரிருளே இறைப் பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. "

ஆண்டவரே, நீர் கரிய மேகத்தில் உறைவதாகக் கூறினீர்" (1அர 8: 12) என்ற திருவசனமே இதற்குச் சாட்சியாக விளங்கிறது. தம் அன்புத் தந்தையும் தம்மைக் கைவிட்டுவிட்டாரோ... என்று அவநம்பிக்கைக் கொள்ளாது, இறைதிருவுளத்தைத் தந்து நமக்கு மீட்பளிக்கிறார். அவர் சித்தத்திற்கு அர்ப்பணிக்கின்றார். இவ்வாறான கீழ்ப்படிதல் வழியாக நமக்கு வாழ்வளிக்கிறார். ஆம், இன்றைய சமுதாயம் இயேசுவையும், இயேசுவின் மதிப்பீடுகளையும் கைவிட்டு விட்டது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு கிறிஸ்துவின் மனநிலையோடு செயல்படா இச்சமுதாயம், இயேசுவைக் கைவிட்டுவிட்டது, இப்படி கைவிடப்பட்ட இயேசுதாமே "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்ற தம் குரலால் நம் உள்ளத்தைத் தொடுகிறாரா?

## ஐந்தாவது வார்த்தை

"தாகமாயிருக்கிறது" (யோவா 19: 28).

**தவிப்பு:** அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த, இயேசு "தாகமாயிருக்கிறது" என்றார். சிலுவையில் இருந்து பேசிய வார்த்தைகளில் மிகச்சிறிய வார்த்தை இதுவே. இதுவரை பிறருக்காக பேசிய இயேசு இப்போது தமக்காகப் பேசுகிறார். என்ன தாகம் இயேசுவுக்கு, கடலையும் கட்டாந்தரையையும் பிரித்தவருக்கு தாகமாம். பாறையைத் தட்டச் சொல்லி தண்ணீர் கொடுத்தவருக்குத் தாகமா? பாலைவனத்தில் மன்னாவைப் பொழியச் செய்தவருக்குத் தாகமா? யோர்தானைத் திசைத்திருப்பி ஓடச் செய்தவருக்குத் தாகமா? உயிரளிக்கும் நீரைத் தருவேன் என்றவருக்குத் தாகமா? இல்லை. இறையாட்சித் தாகமே அவரின் தாகம். நீதிக்கான தாகம், அரசியல் விழிப்புணர்வுக்கான தாகம், விளிம்பு மக்கள் வாழ்வுக்கான தாகம். ஆம், இயேசுவின் தாகம் தணிக்க ஒன்றையேனும் செய்வோமா? நம்மேல் தாகம் கொண்ட அவருக்கு காடிகளையே கொடுக்கப்போகின்றோமா? சிந்திப்போம்.

## ஆறாவது வார்த்தை

"எல்லாம் நிறைவேறிற்று" (யோவா 19: 30)

**கையளிப்பு:** இயேசு தனது பணிக்காலத்தின் இறுதியில் சிலுவையில் மரித்தபோது, "எல்லாம் நிறைவேறிற்று எனக்கூறி ஆவியைத் தந்தையிடம் ஒப்படைத்தார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற தம்மையே தாழ்த்தி, அடிமையின் தன்மைக்கொண்டு மானிட உருவெடுத்தார். அவர் சிலுவையிலே மரித்தபோது கடைசி துளி இரத்தம்வரை சிந்தி தமது வாழ்வை மானிடரின் மீட்புக்காக அர்ப்பணித்தபோது "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறுகிறார். நிறைவேறிற்று என்ற சொற்றொடர் நிலையாக மாறி, மூன்று காலங்களையும் உணர்த்தி நிற்கிறது. இறையரசின் முன் அடையாளமாக செயல்படுகிறது. காலம் நிறைவேறிவிட்டது, கடவுளரசு நெருங்கிவிட்டது என்று நேற்றைய நிகழ்வையும், இறையரசு நாளையும் நம்பிக்கையின் நிகழ்வினையும் தெளிவாக உணர்த்துகிறது.

நிறைவேறிற்று என்ற இயேசுவின் உள்ளுயிர் ஆற்றல், மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரின் உயிரின் தொடக்க இயக்கமாக இயங்குகிறது. இயேசுவின் இரத்தத்திலிருந்த உயிரணுக்கள் மானிட உயிரில் கலந்து இறையன்பிற்குச் சாட்சியாக, மானிட வாழ்விற்கு ஊற்றாக அமைகின்றன. ஆம், நிறைவேறிற்று என்ற இயேசுவின் உயிரில், உணர்வில், இரத்த அணுக்களில் உள்ள உயிராற்றலை நம்முடைய உயிராக்கி, உணர்வாக்கி, நிறைவாழ்வினைப் பெற்று விடுதலைப் பணியினைத் தொடர்ந்திடுவோம்.

## ஏழாவது வார்த்தை

"தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் (லூக் 23: 46)

**ஒப்படைப்பு:** இதோ கடவுளிடமிருந்து அவரின் வீட்டைவிட்டு புறப்பட்டு தொலை நாடாகிய இவ்வுலகம் வந்தார். அவர் இந்த உலகிலே கண்போன போக்கிலோ, கால்போன போக்கிலோ, மனம்போன போக்கிலோ வாழவில்லை. மாறாக, தனது வாழ்க்கையைக் குறிப்பிட்ட இலட்சியத்திற்காக அர்ப்பணித்தார். அவரின் இலக்கையும், இறைத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற அனைத்தையும், ஏன் தன் ஆவியையும் இணைத்து தனது வெற்றி இலக்கினை முழுமையாக நிறைவடையச் செய்தார். பிறருடைய கேலிப்பேச்சுகள், அவமதிப்புகள் அனைத்தையும் எதிர்கொண்டு மனந்தளராமல், பதற்றமடையாமல் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி இறுதியாக "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று தந்தையிடம் தமது தியாக வாழ்வை ஒப்படைக்கிறார். ஆம், இம்மானிதரின் இலட்சிய வாழ்வு நம் வாழ்க்கைப் பயணத்திற்கு வழிகாட்டுதலாய் விளங்கி, நம்மில் ஒருவராக அவர் வாழ்ந்தார். இறைமகன் இயேசுவிற்கு துன்பம் இழைத்தவர் பலர். ஆனால் அவர்களை அவர் பழிவாங்கவில்லை. மாறாக, மன்னித்து, "தந்தையே இவர்களை மன்னியும்" என்று அனைத்து அவமானங்களையும் இறைவனிடம் ஒப்படைக்கிறார். இறைமகன் இயேசு இவ்வாறு துன்பப்பட்டாரென்றால், அவர் காட்டிய நம்பிக்கை ஒளியில், இலட்சிய பாதையில் நாம் பயணித்திடவும், நமது வாழ்வில் நாம் சந்திக்கும் வெற்றி தோல்விகள், ஏமாற்றங்கள் அனைத்தையும் கடந்து அன்பு, மன்னிப்பு, உறவு என்ற வசந்த மலர்கள் நம்மில் மலரவும் இறைவன் நம் ஒவ்வொருவரையும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்.

**முடிவாக...** சிலுவையில் இந்த ஏழுவார்த்தைகள், வெறும் வார்த்தைகளாய் நமக்கு இல்லாமல் அவற்றை வாழ்வாக்கிடுவோம். அன்று மலர்ந்து அன்றே மடியும் மலர்கூட தன் மணத்தை முழுமையடையச் செய்கிறது. ஆனால் மனிதர்களாகிய நாம் மட்டும்... ஆம் மணம் பரப்புவோம்.

## பாடுகளின் பாதை

**முன்னுரை**

என்றோ வாழ்ந்து முடிந்துவிட்ட, இறந்துவிட்ட ஒரு மனிதனின் பாதையல்ல, இது. இன்றும் நம்மோடு, நம்மில் வாழுகின்ற கடவுளின்பாதை. இது பழமையான கதையல்ல, கற்பனையல்ல புதுமையின் காவியம். சடங்கையும் சம்பிரதாயத்தையும் கடந்து நின்று அன்றாட வாழ்க்கைக்கு அறைகூவல் விடுப்பது. நமக்கு நாமே சிறைகளை அமைத்துக் கொள்வதைத் தடுப்பது சிறையிலிருக்கும் நம்மை விடுப்பது. சீரழியும் நவீன கலாச்சாரத் தளைகளை அறுத்து மனிதன், முழுமனிதனாக வாழும் மாற்றுக் கலாச்சாரத்தைக் கொடுப்பது சிலுவைப் பாதை ஒரு வாழ்க்கைப் பாதை. இயேசுவின் சிலுவைப் பாதையில் நமது சிலுவைப் பாதைகளை எதிர்கொள்ளும்போது இடுக்கான வாயில் வழியே நுழைகின்றோம் என்பதால், இயேசுவின் பாதையில் இருந்து நமது பாதைகள் விலகி, அந்நியப்படுத்தப்பட்டு இருப்பதால், இலட்சிய வாழ்விற்கும் நடைமுறை வாழ்விற்கும் இடைவெளி உள்ளதால், நமது மனம் சஞ்சலப்படலாம். நெஞ்சில் உறுத்தல் ஏற்படலாம், அந்த உறுத்தல்தான் புதுவாழ்வின் துவக்கம். ஆகவே, திறந்த மனத்தைத் தருமாறு வேண்டி நமது சிலுவைப் பாதையைத் தொடங்குவோம்.

### முதல் நிலை: இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

ஒருவர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.

எல்: அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இயேசுவின் தலையில் முள்முடி சூட்டப்படுகிறது. பிலாத்து இயேசுவுக்குச் சிலுவை மரணத்தை அநியாயமாகத் தீர்ப்பாக அளிக்கிறான். (மௌனம்)

ஒருவர்: எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

எல்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

### இரண்டாம் நிலை: இயேசு சிலுவையை ஏற்கிறார்

சுமப்பதற்கான சிலுவை ஒன்று இயேசுவுக்கு அளிக்கப்படுகிறது. நம் அனைவரின் பாவங்களையும் தன்மேல் சுமந்துக்கொண்ட இயேசு சிலுவையைச் சுமந்து செல்கிறார். (மௌனம்)

**மூன்றாம் நிலை: இயேசு முதல் முறை கீழே விழுகிறார்**

அதிகமான துன்பங்களால் சோர்வடைந்த இயேசு தள்ளாடி, தடுமாறி கல்வாரி மலையை அடைவதற்குமுன் கீழே விழுகிறார், ஆனால் போராடி மீண்டும் எழுந்து தன் இலக்கை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்கிறார். (மௌனம்)

**நான்காம் நிலை: இயேசு மனம் நொந்த தம் தாயாரை சந்திக்கிறார்**

கல்வாரிக்குச் செல்லும் வழியில் இயேசு தம் தாயைச் சந்திக்கிறார். வேதனையால் இருவரின் இதயங்களும் துடிக்கின்றன. தன் தாய்மேல் இயேசு கொண்ட அன்பும், கரிசனையும், மகன்மேல் தாய்கொண்ட அன்பும், அக்கறையும் பார்வைப் பரிமாற்றத்திலே சங்கமிக்கின்றன. (மௌனம்)

**ஐந்தாம் நிலை: சீமோன் சிலுவையை சுமக்க இயேசுவுக்கு உதவுகிறார்**

இயேசு மிகவும் பலவீனம் அடைகிறார். தொடர்ந்து இயேசுவால் சிலுவையோடு பயணம் செய்ய இயலாது என்பதை அறிந்த கொலைக்காரர்கள் இயேசுவின் சிலுவையைச் சுமந்து வர சீமோனைக் கட்டாயப்படுத்துகிறார்கள். (மௌனம்)

**ஆறாம் நிலை: இயேசுவின் திருமுகத்தை துடைக்கிறாள்**

வியர்வையாலும், வழிந்த இரத்தத்தாலும் இயேசுவின் முகம் முழுவதும் நனைந்து விட்டது. அப்போது இரக்கத்தாலும், அன்பினாலும் உந்தித் தள்ளப்பட்ட வீரப்பெண் வெரோணிக்கா வெள்ளைத் துணியால் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள். இதற்கு பதிலாக இயேசு தன் திருமுகத்தை அத்துணியில் பதிக்கிறார். (மௌனம்)

**ஏழாம் நிலை: இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்**

சிலுவையின் சுமையால் இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார், பகைவர்கள் இயேசுவின் கால்களைப் பிடித்து இழுத்து கல்வாரி நோக்கி பயணிக்க வைக்கின்றனர். (மௌனம்)

**எட்டாம் நிலை: இயேசு எருசலேம் பெண்களை சந்திக்கிறார்**

இயேசு மிகவும் கொடூரமாகத் தாக்கப்படுகிறார். இரத்தம் ஆறாய் பெருக்கெடுத்து ஓட, இதை பார்த்த எருசலேம் பெண்கள் புலம்பி அழுகின்றனர். அப்போது இயேசு அவர்களிடம், "நீங்கள் எனக்காக அழவேண்டாம் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார். (மௌனம்)

**ஒன்பதாம் நிலை: இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்**

இயேசு மிகவும் களைப்படைந்து தள்ளாடுகிறார். மூன்றாம் முறையாகத் தரையில் குப்புற விழுகின்றார். அசைவதற்கே பலமற்றிருந்த

இயேசுவை, கயவர்கள் வேகமாக நடக்கச் சொல்லி வதைக்கிறார்கள். (மௌனம்)

பத்தாம் நிலை: இயேசுவின் ஆடைகள் உரியப்படுகின்றன

இயேசு தன் கல்வாரிக்குன்றின் உச்சிக்கு வந்துவிட்டார். அப்போது அவர்கள் இயேசுவின் ஆடைகளை உரித்தெடுக்கிறார்கள். உடலோடு ஒட்டியிருந்த ஆடையை வேகமாகப் பிடித்து இழுப்பதால் உடலின் காயங்கள் மீண்டும் திறக்கப்பட காயங்களில் இருந்து இரத்தம் பீறிடுகிறது. (மௌனம்)

பதினோராம் நிலை: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

இயேசு சிலுவைமேல் கிடத்தப்படுகிறார். கொலைக்காரர்கள் இயேசுவின் கரங்களையும், கால்களையும், சிலுவையோடு சேர்த்துக்கட்டி மிகக் கூர்மையான ஆணிகளால் இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள். (மௌனம்)

பன்னிரெண்டாம் நிலை: இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்

இயேசு சிலுவையில் அறையப்பட்டு தொங்கவிடப்படுகிறார். மூன்று மணிநேர கொடூர வேதனைக்குப்பின் தந்தையின் கரங்களில் தலை சாய்த்து ஆவியைக் கையளித்து உயிர்விடுகிறார். (மௌனம்)

பதிமூன்றாம் நிலை: இறந்த இயேசு தன் தாயின் மடியில்

இயேசுவின் சீடர்களால் அவரது உயிரற்ற உடல் சிலுவையில் இருந்து இறக்கப்பட்டு அவர் தாயின் மடியில் மென்மையாக கிடத்தப்படுகிறது. (மௌனம்)

பதிநான்காம் நிலை: இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்

இயேசுவின் உடல் துணிகளால் சுற்றப்பட்டு அருகில் இருந்த நண்பரின் கல்லறையில் வைக்கப்படுகிறது. மிகப்பெரிய கல்லை கல்லறை வாயிலில் வைத்து விட்டு அனைவரும் அங்கிருந்து சென்று விடுகின்றனர். (மௌனம்)

செபம்

இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை உண்மையிலேயே கருவறையானது. ஏனெனில் அக்கருவறையிலிருந்துதான் இயேசு புதுமனிதனாக மாட்சியின் மன்னராக, வெற்றியின் வீரராக உயிர்த்தெழுந்து வந்தார். அன்பான இறைவா, கல்லறையை நீர் கருவறையாக மாற்றினீர். கருவறைகளைக் கல்லறையாக மாற்றுவோர் மனம்மாற உம் அருளைப் பொழிந்தருளும். ஆமென்.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச

### திருத்தந்தையின் அமேசான் திருத்தூது அறிவுரை மடல்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "Querida Amazonia", அதாவது "அன்புக்குரிய அமேசான்" என்ற தலைப்பில் உருவாக்கியுள்ள திருத்தூதுமடல், பிப்ரவரி 12, இப்புதனன்று வெளியிடப்பட்டது. 4 பிரிவுகளையும், 111 பத்திகளையும் கொண்டு, இஸ்பானிய மொழியில் திருத்தந்தை உருவாக்கியுள்ள இந்த அறிவுரை மடலில் அமேசான் நிலப்பகுதியைக் குறித்து அவர் கொண்டுள்ள நான்கு கனவுகள் ஆரம்பத்தில் இடம் பெற்றுள்ளன. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தாம் காணவிழையும் நான்கு கனவுகளையும், சமுதாயக் கனவு, கலாச்சாரக் கனவு, சுற்றுச்சூழல் கனவு மற்றும் திருஅவைக் கனவு என்ற நான்கு பிரிவுகளில் விளக்கிக் கூறியுள்ளார்.

### சிரியா, சீனாவுக்காக அனைவரும் செபிக்க அழைப்பு

பல்வேறு வகைகளில் துயர்களை அனுபவிக்கும் அன்பு நிறைந்த சிரியா நாட்டிற்காகச் செபிப்போம். பல குடும்பங்கள், வயது முதிர்ந்தோர், குழந்தைகள் தங்களின் சொந்த இடங்களை விட்டு போரின் காரணமாக வேறு இடங்களுக்குத் தப்பியோட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கொடிய நோயால் துன்பங்களை அனுபவிக்கும் நம் சீனநாட்டு சகோதரர் சகோதரிகளுக்காக செபிப்போம். விரைவில் குணம் பெறுவதற்குரிய வழிகள் கண்டு கொள்ளப்பட வேண்டுமென நம் செபங்களை எழுப்புவோம் என்று திருத்தந்தை கூறினார்.

### அணு பாதுகாப்பு பன்னாட்டு கருத்தரங்கில் திருப்பீடம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாகசாகியில், அணு ஆயுதங்கள் பற்றி ஆற்றிய உரையில், பாதுகாப்பு, அமைதி மற்றும் நிலையான தன்மையே, மனித இதயத்தின் மிக ஆழமான ஏக்கங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. அணு ஆயுதங்களற்ற உலகைக் காண்பதே, இலட்சக்கணக்கான மனிதரின் ஆவலாக உள்ளது என்று கூறினார்.

### அர்ப்பண வாழ்வு வாழ்வோரின் 24வது உலக நாள்

அர்ப்பண வாழ்வு வாழ்வோரின் 24வது உலக நாள் பிப்ரவரி 2, இஞ்ஞாயிறன்று சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு அர்ப்பண வாழ்வு வாழ்வோர் பேராயத்தலைவர் கர்தினால் Joa Braz de Aviz அவர்கள், திருஅவையில் துறவியர், சாட்சிய வாழ்வு வாழ வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கொண்டாடுவதாக இந்த உலக நாள் அமைந்துள்ளது என்று கூறினார். "இயேசு நம்மை பெரும் எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கவில்லை மற்றும் அனுப்பவில்லை. ஆனால் அவர் நம்மை ஒரு பணிக்காக அழைத்திருக்கிறார்" என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2019ம் ஆண்டில் மொராக்கோவில் திருத்தூது பயணம்

மேற்கொண்டபோது அருள்பணியாளர் மற்றும் துறவியரிடம் கூறிய சொற்களே, இந்த 24வது உலக நாளின் கருப்பொருள் என்று, கர்தினால் Aviz அவர்கள் கூறினார். துறவியர், தம் வாழ்வுக்குப் பிரமாணிக்கமாக இருப்பதற்கு, முதலில் அவர்களது பார்வை கடவுளை நோக்கியதாக இருக்க வேண்டியது மிக முக்கியம் என்று கூறினார்.

**கர்தினால்கள் அவையின் புதிய தலைவர், கர்தினால்ரே**

கர்தினால்கள் அவைத்தலைவராக, கர்தினால் ஜொவான்னி பத்திஸ்தாரே அவர்களும், அதன் துணைத்தலைவராக, கர்தினால் லெயோனார்தோ சாந்த்ரி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் ஒப்புதலை வழங்கியுள்ளார். கர்தினால் லெயோனார்தோ சாந்த்ரி அவர்கள் கீழை வழிபாட்டு முறைப் பேராயத்தின் தலைவராவார்.

## சுடர் வாசகர் போட்டி - 68 சரியான விடைகள்

1. "இளைஞரே, ஆற்றலோடு மாற்றம் நோக்கி"
2. 15 நிமிடங்கள்
3. திருத்தந்தை 9ம் பயஸ்
4. 1873ம், ஒலிவ ஜெசி
5. 4ம் நூற்றாண்டில்
6. 1057 நவம்பர் 30ம் தேதி
7. கேரள மாநிலத்தில், 1805ஆம் ஆண்டு
8. புனித சிரில், புனித மெத்தோடியுஸ்
9. 9ம் பத்திநாதர்
10. யோவான் ஹெக்டர் தே பிரிட்டோ
11. ஓரியூர் மணல் திட்டுக்கு அழைத்து வந்து 1693 பிப்ரவரி 4ம் நாள்
12. அருளாளர் 9ம் பயஸ்
13. 1903ம் தூரின் நகரிலுள்ள குவோர்னியில்
14. அன்னை மரியாள் பெர்னதெத்துக்கு
15. டிசம்பர் 8, 2019 முதல் டிசம்பர் 10, 2020

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

M. Johnson, Tirunelveli

Sr. Ophelia, Covai

B. Silviya Berchmans, Chennai

## சுடர் வாசகர் போட்டி - 69

1. புனித கசிமீர் எந்த ஆண்டு எந்த நகரில் பிறந்தார்?
2. செப்டிமஸ் செவேருஸ் என்ற கொடுங்கோலன் யாரை கைது செய்து மிருகங்களுக்கு இரையாகப்போட உத்தரவிட்டான்?
3. தம் வீட்டின் ஒரு பகுதியையே ஏழைகளுக்கான மருத்துவ விடுதியாக மாற்றியது யார்?
4. புனித பேட்ரிக்கின் பெற்றோர் பெயர் என்ன?
5. 16வது வயதில் அடிமையாக சிறைப்பிடிக்கப்பட்டவர் யார்?
6. புனித சிரிலும், எருசலேம் மக்களும் சிலுவைப்பற்றி கண்ட காட்சி என்ன?
7. திருஅவையில் எபேசு சங்கம் எந்த ஆண்டு நடைபெற்றது?
8. திருஅவை மார்ச் 19ஆம் நாளில் யாருடைய பெருவிழாவை கொண்டாடுகிறது?
9. கி.பி. 203ம் ஆண்டில் உரோமையில் யாருடைய ஆட்சி நடந்துக் கொண்டிருந்தது?
10. சிலுவையில் இயேசு கூறிய இரண்டவாது வார்த்தை என்ன?
11. 13ம் வயதில் ஹங்கேரியின் அரசராக யார் நியமிக்கப்பட்டார்?
12. புனித பேட்ரிக் கடவுள் மூன்று ஆட்களாயிருக்கிறார் என்பதை எப்படி விளக்கினார்?
13. பேராயர் புல்டன் ஷீன் முதல் மனிதனின் வீழ்ச்சி மற்றும் மனித மீட்பு பற்றி கூறுவது என்ன?
14. திருஅவையின் பாதுகாவலர் யார்?
15. கடவுள் நிலையிலிருந்து மனித நிலைக்கு தன்னைத் தாழ்த்தி, இவ்வுலகிற்கு வந்த இறைமகனின் நோக்கம் என்ன?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:.....................................
முகவரி:...................................
..........................................
..........................................
..........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பவுலா நகர்ப் புனித பிரான்சிஸ் வனத் துறவி

புனித இசிதோர் ஆயர்

குருத்து ஞாயிறு

ஆண்டவருடைய இரவு உணவு

ஆண்டவருடைய உயிர்ப்பு பாஸ்கா ஞாயிறு

பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு

புனித ஜார்ஜ் மறைச்சாட்சி, புனித அடால்பெர்ட் ஆயர்

புனித மாற்கு நற்செய்தியாளர்

பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு

மான்போர்ட் நகர்ப்பு னித லூயிஸ் மரிய கிரிஞ்ஞோன்

சியென்னா நகர்ப் புனித கத்ரீனா

புனித ஐந்தாம் பயஸ் திருத்தந்தை

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம்

புனித மாற்கு - வாழ்வு தரும் பாடம்

வாழ்வை மாற்றும் புனித வாரம்

திருஅவைச் செய்தகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மார்ச் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## மார்ச் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ஞா | **தவக்காலம் முதல் ஞாயிறு** | I. தொநூ 2: 7-9, 3:1-7<br>II. உரோ 5: 12-19 | மத் 4: 1-11 |
| 2 | தி | | லேவி 19: 1-2, 11-18 | மத் 25: 31-46 |
| 3 | செ | | எசா 55: 10-11 | மத் 6: 7-15 |
| 4 | பு | புனித கசிமீர் | யோனா 3: 1-10 | லூக் 11: 29-32 |
| 5 | வி | | எஸ்தர் 4: 17 | மத் 7: 7-12 |
| 6 | வெ | | எசே 18: 21-28 | மத் 5: 20-26 |
| 7 | ச | புனித பெர்பேத்துவா - பெலிசித்தா | இச 26: 16-19 | மத் 5: 43:48 |
| 8 | ஞா | **தவக்காலம் இரண்டாம் ஞாயிறு** | I. தொநூ 12: 1-4<br>II. 2திமொ1:8-10 | மத் 17: 1-9 |
| 9 | தி | உரோம் நகர் புனித பிரான்செஸ் | தானி 9:4-11 | லூக் 6: 36-38 |
| 10 | செ | | எசா 1:10,16-20 | மத் 23: 1-12 |
| 11 | பு | | எரே 18:18-20 | மத் 20: 17-28 |
| 12 | வி | | எரே 17: 5-10 | லூக் 16: 19-31 |
| 13 | வெ | | தொநூ 37: 3-4, 12-13, 17-28 | மத் 21:33-43, 45-46 |
| 14 | ச | | மீக்கா 7: 14-15,18-20 | லூக் 15:1-3,11-32 |
| 15 | ஞா | **தவக்காலம் மூன்றாம் ஞாயிறு** | I. விபா 17: 3-7<br>II. உரோ 5: 1-2,5-8 | யோவா 4: 5-42 |
| 16 | தி | | 2அர 5:1-15 | லூக் 4: 24-30 |
| 17 | செ | | தானி 1:2,11-19 | மத் 18: 21-35 |
| 18 | பு | எருசலேம் நகர் புனித சிரில் | இச.4: 1,5-9 | மத் 5: 17-19 |
| 19 | வி | **புனித யோசேப்பு புனித மரியாவின் கணவர் பெருவிழா** | I. 2சாமு 7:4-5,12-14,16<br>II. உரோ 4:13,16-18,22 | மத் 1:16,18-21,24 |
| 20 | வெ | | ஓசே 14:1-9 | மாற்கு 12:28-34 |
| 21 | ச | | ஓசே 6:1-6 | லூக் 18: 9-14 |
| 22 | ஞா | **தவக்காலம் நான்காம் ஞாயிறு** | I. 1சாமு 16:1,6-7,10-13<br>II. எபேசி 5:8-14 | யோவா 9: 1-41 |
| 23 | தி | | எசா 65: 17-21 | யோவா 4: 43-54 |
| 24 | செ | | எசா 47: 1-9,12 | யோவா 5:1-3,5-16 |
| 25 | பு | **ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா** | I. எசா 7:10-14,8:10<br>II. எபி 10: 4-10 | லூக் 1: 26-38 |
| 26 | வி | | விப 32: 7-14 | யோவா 5: 31-47 |
| 27 | வெ | | சாஞா 2: 1,12-22 | யோவா 7: 12,10,25-30 |
| 28 | ச | | எரே 11: 18-20 | யோவா 7: 40-53 |
| 29 | ஞா | **தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு** | I. எசே 37: 12-14<br>II. 2உரோ 8: 8-11 | யோவா 11:1-45 |
| 30 | தி | | தானி 2:1-9,15-17,19-30,33-62 | யோவா 8: 1-11 |
| 31 | செ | | எண் 21: 4-9 | யோவா 8: 21-30 |